# <u>செவிலிமேடு பேரூராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம்</u>
# <u>ஒப்பந்தப்புள்ளி அறிக்கை</u>

**ந.க.எண்.393/2010** **நாள்.09.11.2010**

## <u>1998–ம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்</u>
## <u>(தமிழ்நாடு சட்டம் 43/1998)</u>

செவிலிமேடு பேரூராட்சிக்காகவும், அதன் சார்பாகவும் 2010–11–ம் ஆண்டு பொது நிதியில் கீழ்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி செவிலிமேடு பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து **2010–ம் ஆண்டு நவம்பர் மாதம் 30–ம் நாள் செவ்வாய்க்கிழமை (30.11.2010) பிற்பகல் 3.00 மணி வரை** (அலுவலக கடிகாரத்தின்படி) நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ செவிலிமேடு பேரூராட்சியின் செயல் அலுவலரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றைய தினமே **பிற்பகல் 3.30** மணியளவில் அப்போது வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். பணி சம்மந்தமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் இவ்வலுவலகத்தில் **29.11..2010 திங்கட்கிழமை மாலை 5.00 மணி வரை** உரிய ஒப்பந்தப்புள்ளி படிவம் கட்டணம் மற்றும் டேவணித் தொகையினை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். பணி சம்மந்தமான இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

| பொது நிதி பணிகள் 2010–201 1. | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.) | முன் வைப்புத் தொகை (ரூ) | ஒப்பந்தப்புள்ளி படிவத்தின் விலை தொகை (ரூ) | பணி முடிக்கும் காலம் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பல்லவன் நகர் முதல் இராகவேந்திரா நகர் வரை உள்ள இணைப்பு சாலை தார் சாலை அமைத்தல். | 11,00,000/- | 11,000/- | 6,720/- | 60 நாட்கள் |
| 2 | காஞ்சி இல்லம் குறுக்கு தெரு சிமெண்ட் சாலை அமைத்தல். | 1,57,000/- | 1,570/- | 340/- | 30 நாட்கள் |
| 3 | பல்லவன் நகர் பூங்கா கூடுதல் பணிகள் செய்தல். | 2,60,000/- | 2,600/- | 850/- | 30 நாட்கள் |

## <u>நிபந்தனைகள்</u>

1) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 43/1998 மற்றும் விதிகள் 200–ன்படி ஒப்பந்தப்புள்ளி பரிசீலிக்கப்படும்.
2) ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறையில் இட்டு சமர்ப்பிக்கப்படவேண்டும்.
3) ஒப்பந்தப்புள்ளி தகுதி அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் பேரூராட்சி அலுவலகத்தில் வழங்கப்படும் மாதிரி படிவத்தில் ரூ.20/– மதிப்புள்ள அரசு முத்திரைத்தாளில் ஒப்பந்தம் செய்து தரப்படவேண்டும்.
4) மேற்படி ஒப்பந்த புள்ளிகள் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். அதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

5) ஒப்பந்ததாரர் இதற்கு முன்னர் இப்பேரூராட்சியிலோ அல்லது வேறு எந்த அலுவலகத்திலோ கருப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டு ஒப்பந்ததாரர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்யப்பட்டவர் என தெரியவந்தால் அவரது ஒப்பந்தப்புள்ளிகள் நீக்கம் செய்யப்படும்.
6) ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளிகளுடன் சென்ற ஆண்டு முடிய வருமான வரி செலுத்திய சான்றினை இணைத்தல் வேண்டும்.
7) பேரூராட்சி மன்ற ரத்த சம்மந்தமான உறவினர்கள் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க்கக்கூடாது.
8) வேலைகள் நடைபெறும்போது உயர் அதிகாரிகள் மற்றும் பொறியாளர்கள் பொருட்கள் தரம் தொடர்பாக சான்று கோரப்படும் போது பெற்றுத்தர ஒப்பந்ததாரர் கட்டுப்பட்டவராவார்.
9) வேலைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிக்க தவறினால் அவர்களால் செலுத்தப்பட்டிருக்கும் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படுவதுடன் குறிப்பிட்ட வேலைகள் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.
10) ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிடப்பட்டுள்ள காலவரைக்குள் மட்டும் பெற்றுக் கொள்ளப்படும். அஞ்சல் வழி மூலம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான கால தாமதத்திற்கு பேரூராட்சி பொறுப்பேற்க இயலாது.
11) அடித்தல், திருத்தல் இன்றி முறையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள், பிணை வைப்புத் தொகையின்றி அளிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை ஏதுமின்றி தள்ளுபடி செய்யப்படும்.
12) வேலைகள் முடிவு பெற்றபின் செவிலிமேடு பேரூராட்சியின் இளநிலை பொறியாளர்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர், காஞ்சிபுரம் அவர்களின் அளவுகள் மேல் அளவுகள், அளவு புத்தகத்தில் பதிவு செய்து மேலொப்பம் வழங்கிய பின்னரே அதற்கான பட்டியல் தொகை வழங்கப்படும்.
13) ஒப்பந்தப்புள்ளி வேலைகளுக்கான செலுத்தப்படும் வைப்புத் தொகை தணிக்கை முடிந்து தணிக்கை அறிக்கையில் தடையேதும் இல்லாத பட்சத்தில் திருப்பி வழங்கப்படும்.
14) ஒப்பந்தப்புள்ளிகளில் கண்ட வேலை விவரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் வந்த தெரிந்து கொள்ளலாம்.
15) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை காரணம் ஏதும் கூறாமல் நிராகரிக்க செயல் அலுவலருக்கு உரிமை உண்டு. ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலுக்கு பிறகே வேலைக்கான உத்திரவு வழங்கப்படும்.
16) ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளில் ஏதேனும் சந்தேகம் ஏற்படின் பேரூராட்சியின் நிர்வாக அலுவலரின் முடிவே இறுதியானது.
17) பணிக்கான இறுதி பட்டியல் வழங்கும்போது பணிக்கான மதிப்பீட்டு தொகையில் RM-5%, IT-2%, SC on IT-12%, ST-2%, SC on ST-5%, T.N.M.W.W.F.-0.30% ஆகியவை பிடித்தம் செய்யப்படும்.

9.11.2010
செயல் அலுவலர்
செவிலிமேடு பேரூராட்சி
காஞ்சிபுரம் மாவட்டம்
9.11.2010

**பெறுநர்**
செவிலிமேடு பேரூராட்சியில் பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்ததாரர்கள்

**நகல்**
1) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2) உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள், காஞ்சிபுரம் மாவட்டம்.
3) இளநிலை பொறியாளர், செவிலிமேடு, காஞ்சிபுரம் மாவட்டம்.
4) பேரூராட்சி தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள்.
5) செவிலிமேடு பேரூராட்சி விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய.
6) செயல் அலுவலரின் பார்வைக்கு மற்றும் தனி பிரதிகளின் கோப்புக்கு.
7) செயல் அலுவலர், உத்திரமேரூர், வாலாஜாபாத், ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி அலுவலக விளம்பர பலகையில் ஒட்டி விளம்பரம் செய்ய.